Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழன், நவம்பர் 28, 2024 | இதழ் 229

## ஈ.வி.கே.எஸ் இளங்கோவன் மருத்துவமனையில் அனுமதி: ஸ்டாலின் நேரில் நலம் விசாரித்தார்



சென்னை, 28 நவம்பர் 2024: உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள ஈரோடு கிழக்கு காங்கிரஸ் எம்.எல்.ஏ. ஈ.வி.கே.எஸ். இளங்கோவனை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், ஈரோடு கிழக்கு தொகுதி எம்.எல்.ஏவுமான ஈ வி கே எஸ் இளங்கோவன் உடல் நலக்குறைவால் நேற்று சென்னையில் உள்ள மியாட் மருத்துவமனையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மூச்சுத்திணறல் பாதிப்பு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஈ வி கே எஸ் இளங்கோவனுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

ஏற்கனவே கடந்த சில நாட்களுக்கு முன்னர் மூச்சுத் திணறல் காரணமாக இதே மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பினார் இளங்கோவன். தற்போது அவருக்கு மீண்டும் மூச்சுத் திணறல் ஏற்பட்டுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அவருக்கு பல்வேறு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதில் நுரையீரல் சார்ந்த பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டு, அதற்காக சிகிச்சை அளிக்கப்படுகிறது. தற்போது அவரது உடல்நிலை சீராக இருப்பதாகவும் மருத்துவர்கள் தொடர் கண்காணிப்பில் இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்நிலையில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட ஈ.வி.கே.எஸ். இளங்கோவனை நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

## அதானி விவகாரம், மணிப்பூர் வன்முறையை விவாதிக்க வலியுறுத்தி எதிர்க் கட்சிகள் தொடர் அமளி: பாராளுமன்றத்தின் இரு அவைகளும் இன்றும் ஒத்திவைப்பு

சென்னை, 28 நவம்பர் 2024: அதானி விவகாரம், மணிப்பூர் வன்முறை உள்ளிட்ட பிரச்சினைகளை விவாதிக்க வலியுறுத்தி பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் இன்றும் பாராளுமன்றத்தின் இரு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டன.

பாராளுமன்றத்தின் இரு அவைகளும் இன்று காலை 11 மணிக்கு கூடின. மக்களவை கூடியதும், மக்களவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரியங்கா காந்தி, வசந்தராவ் ஆகியோர் உறுப்பினர்களாக பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டனர்.

இதனையடுத்து கேள்வி நேரம் தொடங்கியது. நெடுஞ்சாலைத் துறை தொடர்பான கேள்விக்கு அமைச்சர் நிதின் கட்கரி பதில் அளித்தார். எனினும், கேள்வி நேரத்தை ஒத்திவைத்துவிட்டு அதானி விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்பிக்கள் அவையில் அமளியில் ஈடுபட்டனர்.

கேள்வி நேரம் முக்கியமானது என்றும், உறுப்பினர்களின் கோரிக்கை ஏற்கப்படும் என்றும் சபாநாயகர் ஓம் பிர்லா தெரிவித்தார். உறுப்பினர்கள் அமைதி காக்குமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார். அவை நடவடிக்கைகளுக்கு இடையூறு செய்வது சரியல்ல, மக்கள் நம்மை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள், நான் வாய்ப்புகளை வழங்குவேன், அவை, முறைப்படி இயங்க ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று சபாநாயகர் ஓம் பிர்லா தொடர்ந்து வலியுறுத்தினார். எனினும், அவையில் தொடர்ந்து கூச்சல் குழப்பம் நிலவியதை அடுத்து அவையை முதலில் நண்பகல் 12 மணி வரை ஒத்திவைத்தார்.

அவை மீண்டும் கூடியதும் மீண்டும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். அமளிக்கு இடையே, வக்ப் மசோதா மீதான பாராளுமன்ற கூட்டுக் குழுவின் காலத்தை நீட்டிக்கக் கோரி பாராளுமன்ற கூட்டுக் குழுவின் தலைவர் ஜெகதாம்பிகா பால் விடுத்த கோரிக்கை வாக்கெடுப்புக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

இதே விவகாரம் மாநிலங்களவையிலும் எழுப்பப்பட்டது. அப்போது பேசிய அவைத் தலைவர் ஜக்தீப் தன்கர், அதானி விவகாரம், மணிப்பூர் வன்முறை என 16 பிரச்சினைகள் தொடர்பாக ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ்கள் அனுப்பப்பட்டுள்ளன. அவற்றை ஏற்க முடியாத நிலையில் நான் இருக்கிறேன். அவையில் கேள்வி நேரம் தொடர அனுமதிக்க வேண்டும் என வலியுறுத்தினார். இதையடுத்து, அவையை முதலில் நண்பகல் 12 மணிக்கு ஒத்திவைப்பதாக ஜக்தீப் தன்கர் கூறினார்.

மீண்டும் அவை கூடியதும் எதிர்க்கட்சி எம்பிக்கள், கேள்வி நேரத்தை ஒத்திவைத்து விட்டு அதானி விவகாரம், மணிப்பூர் வன்முறை குறித்து விவாதிக்க வேண்டும் என வலியுறுத்தினர். அவை திட்டமிட்ட ரீதியில் மட்டுமே நடைபெறும் என்றும் உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவைத் தலைவர் ஜக்தீப் தன்கர் வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்ற செயல்பாட்டுக்கு இடையூறு ஏற்படுத்துவது ஒரு நோய் என்று குறிப்பிட்ட ஜக்தீப் தன்கர், இத்தகைய இடையூறுகள் பாராளுமன்றத்தை பலவீனப்படுத்துகிறது என்று கூறினார். எனினும், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தொடர் அமளியில் ஈடுபட்டதை அடுத்து அவை நாளை காலை 11 மணிக்கு கூடும் என்றும், அதுவரை அவை ஒத்திவைக்கப்படுகிறது என்றும் ஜக்தீப் தன்கர் தெரிவித்தார்.




## புயல் உருவாவது மேலும் தாமதம்; நாளை மறுநாள் ‘ரெட் அலர்ட்‘ - சனிக்கிழமை கரையைக் கடக்கிறது




சென்னை, 28 நவம்பர் 2024: வங்கக் கடலில் புயல் உருவாவது மேலும் தாமதமாகி உள்ளது. தமிழ்நாட்டில் நாளை மறுநாள் 'ரெட் அலர்ட்' விடுக்கப்படுவதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வங்கக்கடலில் உருவான ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் மீண்டும் நகராமல் அதே இடத்தில் நீடிப்பதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மணி நேரங்களாக மணிக்கு 2 கிலோ மீட்டர் வேகத்தில் நகர தொடங்கி இருந்த நிலையில் தற்போது மீண்டும் அதே இடத்தில் நீடிப்பதாக கூறப்பட்டுள்ளது.

தற்போதைய நிலைவரப்படி, சென்னைக்கு தென் கிழக்கே 480 கி.மீ. தூரத்தில் தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலம் நிலைக் கொண்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் அடுத்த 12 மணி நேரத்தில் புயலாக உருவாகக் கூடும் என வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

இதனிடையே இந்த புயல் வலுஇழந்து ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி வரும் 30-ம் தேதி (நாளை மறுதினம்) காரைக்கால் - மாமல்லபுரம் இடையே கரையைக் கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் இன்று இரவு முதல் மழை படிப்படியாக அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் வட தமிழக கடலோரப் பகுதிகளில் மிதமான மழை பெய்யக்கூடும். இன்று காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் கனமழை முதல் மிக கனமழை முதல் பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை, திருவள்ளூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் காரைக்காலிலும் கனமழைக்கு வாய்ப்புள்ளது.

நாளை சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழை வரை பெய்ய வாய்ப்புள்ளது. வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களிலும், புதுச்சேரியிலும் ஆங்காங்கே கனமழைக்கு வாய்ப்புள்ளது.

30-ம் தேதி சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு, ராணிப்பேட்டை மாவட்டங்களில் கனமழை முதல் மிக கனமழைக்கு வாய்ப்புள்ளது. வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களிலும் புதுச்சேரியிலும் ஆங்காங்கே கனமழைக்கு வாய்ப்புள்ளது.

இன்று தமிழகம், காரைக்கால், புதுச்சேரி கடல் பகுதியில் மணிக்கு 45 முதல் 65 கிமீ வரையிலான பலத்த தரைக்காற்று வீசக்கூடும். நாளை மணிக்கு 70 கிமீ வேகம் வரை பலத்த தரைக் காற்று இப்பகுதிகளில் வீசக்கூடும்.

ஆழ்கடல் பகுதிக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் உடனடியாக கரை திரும்பும்வரை அறிவுறுத்தப்படுகிறார்கள். அடுத்த அறிவிப்பு வரும்வரை மீனவர்கள் இப்பகுதிகளில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வரும் 30ம் தேதி ஒரிரு இடங்களில் அதி கனமழைக்கு வாய்ப்புள்ளதால் (21 செ.மீ) ரெட் அலர்ட் விடுக்கப்படுவதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

மேலும் இன்று மாலை முதல் நாளை காலை வரை தென்மேற்கு வங்கக்கடலில் மணிக்கு 85 கி.மீ. காற்றின் வேகம் கொண்ட ஆழமான காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஒரு சூறாவளி புயலாக மாற வாய்ப்பு உள்ளது என்றும் கூறி இருக்கிறது.

இந்த புயலானது பின்னர் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி வரும் 30-ம் தேதி காலை காரைக்கால் மற்றும் மகாபலிபுரம் இடையே வட தமிழ்நாடு-புதுச்சேரி கடற்கரையை கடக்கும். அன்று 20 செ.மீ., மேல் மழை பொழியும் என இந்திய வானிலை மையம் தெரிவித்துள்ளது.

டெல்டா மாவட்டத்தில் மட்டும் 30 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கி காணப்படுகின்றன.

நாகை மாவட்டத்தில் 20 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்களும், தஞ்சை மாவட்டத்தில் 2 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்களும், திருவாரூர் மாவட்டத்தில் 5 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்களும் நீரில் மூழ்கி காணப்படுகின்றன. மயிலாடுதுறை மாவட்டத்தில் 20 ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்களை தண்ணீர் சூழ்ந்துள்ளது. ஒரு சில இடங்களில் நெற்பயிர்கள் நீரில் மூழ்கி காணப்படுகின்றன.

நாகையில் நம்பியார் நகர் உள்ளிட்ட கடற்கரைப்பகுதிகளில் கடல் சீற்றத்துடன் காணப்படுகிறது. இதனைத்தொடர்ந்து கடற்கரைப்பகுதிகளுக்கு மக்கள் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி கடற்கரைக்கு பொதுமக்கள் செல்லக் கூடாது என்று அம்மாநில முதல்-அமைச்சர் ரங்கசாமி அறிவுறுத்தி உள்ளார்.

பெங்கல் புயலால் பாதிக்கப்படும் பகுதிகளில் மீட்பு நடவடிக்கையை செய்ய தயார்நிலையில் உள்ளதாகவும், பாதிக்கப்படும் பகுதிகளுக்கு தேவையான உதவிகளை வழங்க தயாராகி வருவதாகவும் இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

இதன்படி மாநில அரசு மற்றும் அதிகாரிகளுடன் இணைந்து மீட்புப்பணிகளை செய்ய தயார் நிலையில் உள்ளதாகவும், உணவு, குடிநீர், மருந்துகள் உள்ளிட்ட பொருட்கள் தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் வெள்ளநிவாரண குழுக்கள், டைவிங் குழுக்கள் உள்ளிட்டவையும் தயார்நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு வருமாறு:

நாகப்பட்டினம் 6 செ.மீ., வேளாங்கண்ணி, திருத்துறைப்பூண்டி, கோடியக்கரை, திருப்பூண்டி, திருக்குவளை, நாகப்பட்டினம், வேதாரண்யம் தலா 5 செ.மீ., சீர்காழி, திருவாரூர், தலைஞாயிறு, செம்பனார்கோயில் தலா 4 செ.மீ., முத்துபேட், நன்னிலம், தாரங்கம்பாடி, எச்சன்விடுதி, காரைக்கால், நீடாமங்கலம், மதுக்கூர், மயிலாடுதுறை, பட்டுக்கோட்டை, பாண்டவையார் ஹெட், கொத்தவாசேரி, கொடவாசல், ஒரத்த நாடு தலா 3 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# ராணுவ தளவாட உற்பத்தியில் முன்னேற்றம் அடைந்துள்ளோம் வெலிங்டன் ராணுவ வீரர்களுடன் ஜனாதிபதி கலந்துரையாடல்

சென்னை, 28 நவம்பர் 2024: ராணுவ தளவாட உற்பத்தியில் நாம் முன்னேற்றம் அடைந்துள்ளோம் என்று ஜனாதிபதி திரவுபதி முர்மு கூறினார்.

ஜனாதிபதி திரவுபதி முர்மு, 4 நாள் பயணமாக நேற்று காலை டெல்லியிலிருந்து விமானத்தில் கோவை வந்து, காரில் சாலை மார்க்கமாக மேட்டுப்பாளையம், கோத்தகிரி வழியே மதியம், 12:30 மணிக்கு, ஊட்டி ராஜ் பவனுக்கு வந்தார்.

டெல்லியில் இருந்து விமானம் மூலம் கோவை வந்த அவர், பின்னர் கார் மூலமாக ஊட்டி ராஜ்பவனுக்கு சென்றார். நேற்று அங்கேயே தங்கி ஓய்வெடுத்தார்.

ஜனாதிபதி திரவுபதி முர்மு இன்று காலை ஊட்டி ராஜ்பவனில் இருந்து கார் மூலம் குன்னூர் வெலிங்டன் ராணுவ பயிற்சி கல்லூரிக்கு சென்றார். அங்கு அவருக்கு ராணுவ வீரர்கள் குதிரை படைகளுடன்




சிறப்பான வரவேற்பு அளித்தனர். வரவேற்பு முடிந்ததும் ராணுவ பயிற்சி கல்லூரிக்குள் சென்ற ஜனாதிபதி, போரில் உயிர் நீத்த ராணுவ வீரர்களின் நினைவு சின்னத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

அதனை தொடர்ந்து, ராணுவ பயிற்சி கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார். அப்போது அங்கு அவர் ராணுவ அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

நிகழ்ச்சியில் ஜனாதிபதி திரவுபதி முர்மு பேசியதாவது:-

ராணுவம் உள்பட பல்வேறு துறைகளிலும் நமது நாடு வளர்ந்து வருகிறது. பல்வேறு புதிய தொழில் நுட்பங்கள் மூலம் ராணுவ தளவாட உற்பத்தியில் நாம் முன்னேற்றம் அடைந்துள்ளோம். எதிர்காலத்தில் ஏற்படும் சவால்களை சந்திக்கும் திறன் நமது ராணுவ வீரர்களுக்கு உண்டு. இவ்வாறு அவர் பேசினார்.

# உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்: முட்டுக்காடு பகுதிகளில் கோலாகல கொண்டாட்டம் ஊராட்சித் தலைவர் சங்கீதா, மாவட்ட பிரதிநிதி மயில்வாகணன் ஏற்பாடு

சென்னை, 28 நவம்பர் 2024: துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா முட்டுக்காடு முதல்நிலை ஊராட்சி பகுதிகளில் ஊராட்சி மன்றத் தலைவர் சங்கீதா மயில்வாகணன், காஞ்சி வடக்கு மாவட்ட கழக பிரதிநிதி மயில்வாகணன் ஏற்பாட்டில் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

தி.மு.க. மாநில இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் 47 வது பிறந்தநாள் விழாவையொட்டி செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் ஒன்றியத்துக்கு உட்பட்ட ஓஎம்ஆர் சாலையையொட்டி அமைந்துள்ள முட்டுக்காடு முதல் நிலை ஊராட்சியில் கட்சினரும் முட்டுக்காடு முதல் நிலை ஊராட்சி மன்ற தலைவருமான பி. சங்கீதா மயில்வாகணன் மற்றும் கட்சியின் காஞ்சி வடக்கு மாவட்ட பிரதிநிதியும், முன்னாள் முட்டுக்காடு முதல் நிலை ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினருமான முட்டுக்காடு மயில்வாகணன் ஆகியோர் கழிப்பட்டூர் மற்றும் ஏகாட்டூர் பொதுமக்கள் கட்சியினர்களுடன் இணைந்து வெகுவிமர்சையாக கொண்டாடினர். முதலாவதாக முட்டுக்காடு ஊராட்சியில் உள்ள ஓஎம்ஆர் சாலை அருகே அமைந்துள்ள கழிப்பட்டூர் கிராமத்தில் விநாயகர் கோவில் அருகே அமைக்கப்பட்டுள்ள கட்சியின் கொடிக்கம்பத்தில் கழகக் கொடியை ஏற்றி வைத்து பிரம்மாண்ட கேக் வெட்டி பொதுமக்களுக்கும் கட்சியினர்களுக்கும் வழங்கினர். பொதுமக்களுக்கு பல்வேறு வகையான மரக்கன்றுகளையும், கழக மூத்த உறுப்பினர்களுக்கு சால்வை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து ஏகாட்டூர் கிராமத்தில் திருமண மண்டபம் அருகே உள்ள கொடிக்கம்பத்தில் கொடியினை ஏற்றி வைத்து, கேக் வெட்டி பொதுமக்களுக்கு வழங்கினர். ஊராட்சி மன்ற அலுவலகம் அருகே கட்சி கொடி




கம்பத்தில் கொடியினை ஏற்றி வைத்து அனைவருக்கும் பிரியாணி வழங்கினர். இந்நிகழ்ச்சியில் தி.மு.க. நிர்வாகிகள், தொண்டர்கள் கழிப்பட்டூர், ஏகாட்டூர் கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# ஜாதி அடிப்படையிலான தொழில்முறையை வலுப்படுத்தும் என்பதால் பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்தாது மத்திய அரசிடம் முதலமைச்சர் ஸ்டாலின் திட்டவட்டம்

சென்னை, 28 நவம்பர் 2024: "மத்திய அரசால் நடத்தப்படும் பிரதமரின் விஸ்வகர்மா திட்டம், ஜாதி அடிப்படையிலான தொழில்முறையை வலுப்படுத்தும் என்பதால், அதனை செயல்படுத்த இயலாது," என முதலமைச்சர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

பிரதமரின் விஸ்வகர்மா என்ற திட்டம் கடந்த 2023-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ந் தேதி அதாவது பிரதமர் மோடி தனது பிறந்த நாளன்று தொடங்கி வைத்தார்.

தச்சர், பொற்கொல்லர், குயவர், சிற்பி உள்ளிட்ட 18 தொழில்களில் ஈடுபடும் கைவினை கலைஞர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக இந்த திட்டத்தை கொண்டு வருவதாக பிரதமர் மோடி அறிவித்தார்.

அதற்காக மத்திய அரசு ரூ.13 ஆயிரம் கோடி நிதியும் ஒதுக்கியது. இந்த திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்படும் கைவினை கலைஞர்களுக்கு பிரதமர் விஸ்வகர்மா சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை வழங்கப்படும். அவர்களுக்கு 15 நாட்களுக்கு திறன் மேம்பாடு பயிற்சி அளிக்கப்படும்.

அதற்கு ஒரு நாளைக்கு அவர்களுக்கு ரூ.500 உதவித்தொகை வழங்கப்படும். இது தவிர ரூ.3 லட்சம் வரை எந்த பிணையும் இல்லாமல் கடன் வழங்கப்படும். இந்த கடன் தொகை ரூ.1 லட்சம் மற்றும் ரூ.2 லட்சம் என 2 தவணைகளாக 18 மாதங்கள் மற்றும் 30 மாதங்களில் வழங்கப்படும்.

அதற்கு 5 சதவீதம் மட்டுமே வட்டி ஆகும். 8 சதவீத வட்டியை மத்திய அரசு மானியமாக அளித்து விடும். இந்த திட்டத்தின் கீழ் பயன்பெற சி.எஸ்.சி. அல்லது கைவினைஞர்களே நேரடியாக அதற்கான இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்கும் போது, இது எங்களது குலத்தொழில் என்பதற்கான உறுதியை கைவினை கலைஞர்கள் கொடுக்க வேண்டும். இந்த விண்ணப்பத்தை முதலில் பஞ்சாயத்து தலைவர் சரிபார்த்து பரிந்துரை செய்ய வேண்டும். அதன்பின் மாவட்ட குழு சரிபார்க்க வேண்டும். அதன்பின் கமிட்டி ஒப்புதல் அளிக்க வேண்டும். இதுவரை இந்த திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் 2 கோடியே 60 லட்சத்து 18 ஆயிரத்து 676 பேர் விண்ணப்பம் செய்துள்ளனர். அதில் 25 லட்சத்து 4 ஆயிரத்து 250 பேர் தேர்வு செய்யப்பட்டு உள்ளனர். மற்ற விண்ணப்பங்கள் ஒப்புதல் வழங்குவதற்காக பரிசீலனையில் உள்ளன.



விஸ்வகர்மா திட்டம் தொடங்கிய நாளில் இருந்தே முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எதிர்ப்பை பதிவு செய்து வருகிறார்.

விரும்புகிற தொழிலை யார் வேண்டும் என்றாலும் செய்யலாம். இதில் குலத்தொழில் என்று வரையறுக்கக்கூடாது. அது சமூகநீதி ஆகாது என்பதே தமிழக அரசின் நிலைப்பாடு. அதே போல் தி.மு.க. கூட்டணியில் உள்ள மற்ற கட்சிகளும் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழகத்தில் இதனை செயல்படுத்த கூடாது என்று வலியுறுத்தின. இந்த திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்றால் மாவட்ட அளவில் குழு ஒன்றும், கண்காணிப்பு கமிட்டி ஒன்றும் அமைக்க வேண்டும். ஆனால் தமிழக அரசு அதனை அமைக்கவில்லை. எனவே தமிழகத்தில் இந்த திட்டத்தை செயல்படுத்துவதற்காக தேர்வு செய்யப்பட்ட 7 மாவட்டங்களில் விண்ணப்பம் செய்த கைவினை கலைஞர்களின் மனுக்கள் எந்த பரிசீலனையும் செய்யப்படாமல் நிலுவையில் வைக்கப்பட்டு உள்ளன.

இந்த திட்டத்தை செயல்படுத்த மாட்டோம் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இப்போது அறிவித்துள்ளார்.

அதற்குப் பதிலாக தமிழகத்தில் கைவினை கலைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் விரிவான திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசு முடிவு செய்து இருப்பதாகவும் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இதுபற்றி அவர், மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மந்திரி ஜிதன் ராம் மஞ்சிக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

இந்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் பிரதம மந்திரி விஸ்வகர்மா யோஜனா திட்டத்தில் உரிய திருத்தங்களை மேற்கொள்ளுமாறு தமிழ்நாடு அரசின் சார்பில் கடந்த ஜனவரி மாதம் 4-ந் தேதி பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதி இருந்தேன்.

அந்த கடிதத்தில் விஸ்வகர்மா திட்டம், சாதி அடிப்படையிலான தொழில் முறையை வலுப்படுத்தும் என்பதை கருத்தில் கொண்டு இந்தத் திட்டத்தை ஆய்வு செய்திட தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு குழு அமைக்கப்பட்டதாகவும் , இந்த குழு விரிவான ஆய்வினை மேற்கொண்டு, இந்த திட்டத்தில் மாற்றங்களை செய்திட பரிந்துரைத்து உள்ளதாகவும் தெரிவித்து இருந்தேன்.

அந்த குழுவின் பரிந்துரைகளின்படி விண்ணப்பதாரரின் குடும்பம், பாரம்பரியமாக குடும்ப அடிப்படையிலான வர்த்தகத்தில் ஈடுபட வேண்டிய கட்டாயத் தேவை நீக்கப்பட வேண்டும். அதற்கு பதிலாக, வழிகாட்டுதல்களில் பட்டியலிடப்பட்டு உள்ள எந்தவொரு தொழிலையும் மேற்கொள்ள விரும்பும் எந்தவொரு நபரும் இந்த திட்டத்தின்கீழ் உதவி பெற தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

இந்த திட்டத்தில் பயன்பெறுவோரின் குறைந்தபட்ச வயது வரம்பினை 35 ஆக உயர்த்த வேண்டும். இதனால் தங்கள் குடும்ப வர்த்தகத்தைத் தொடர, அதனை நன்கறிந்தவர்கள் மட்டுமே இந்தத் திட்டத்தின் கீழ் பலன்களைப் பெற முடியும். கிராமப்புறங்களில் பயனாளிகளை சரிபார்க்கும் பொறுப்பு கிராம பஞ்சாயத்து தலைவருக்கு பதிலாக, வருவாய்த் துறையைச் சேர்ந்த கிராம நிர்வாக அலுவலரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கூறியிருந்தேன்.

இந்த நிலையில் மத்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் அமைச்சகத்தில் இருந்து கடந்த மார்ச் மாதம் 15-ந் தேதி வந்த பதில் கடிதத்தில் தமிழக அரசு பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. எனவே, பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தை தற்போதைய வடிவில் செயல்படுத்துவதை தமிழ்நாடு அரசு முன்னெடுத்துச் செல்லாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இருப்பினும், சமூக நீதி என்ற ஒட்டுமொத்த கொள்கையின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள கைவினை கலைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில், சாதி அடிப்படையில் பாகுபாடு காட்டாத கைவினைஞர்களை உள்ளடக்கி, விரிவான திட்டம் ஒன்றினை உருவாக்கிட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

தமிழ்நாடு அரசு செயல்படுத்த இருக்கும் இந்தத் திட்டம், சாதி மற்றும் குடும்பத் தொழில் வேறுபாடின்றி, மாநிலத்தில் உள்ள அனைத்து கைவினைஞர்களுக்கும் முழுமையான ஆதரவை அளிக்கும். இத்தகைய திட்டம் அவர்களுக்கு நிதி உதவி, பயிற்சி மற்றும் அவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்தையும் விரிவாக உள்ளடக்கியதாக இருக்கும். இவ்வாறு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# 3 ஆண்டில் 1 லட்சத்து 69 ஆயிரம் புதிய வேளாண் மின் இணைப்பு: அமைச்சர் செந்தில் பாலாஜி தகவல் உழவர்களின் உண்மைத் தோழன் மு.க.ஸ்டாலின்



சென்னை, 28 நவம்பர் 2024: முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் திராவிட மாடல் ஆட்சியின் 3 ஆண்டு காலத்தில் 1 லட்சத்து 69 ஆயிரத்து 564 புதிய வேளாண் மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அண்ணா தி.மு.க. ஆட்சியில் முந்தைய ஐந்தாண்டுகளில் வழங்கப்பட்ட மின் இணைப்புகள் 1 லட்சத்து 38 ஆயிரத்து 592 மட்டுமே என்று மின்சாரத்துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் செந்தில் பாலாஜி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாட்டில் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட இந்தியாவிலேயே முதன் முறையாக 1989 -1990 ம் ஆண்டில் உழவர்களுக்கு இலவச மின்சாரத் திட்டத்தைத் தொடங்கி வைத்தவர் கலைஞர். தொலைநோக்குப் பார்வையில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தால் தமிழ்நாட்டின் கிராமங்கள் துரித வளர்ச்சியை அடைந்தன. விவசாய நிலப்பரப்பு விரிவடைந்தது. விவசாயிகள் தன்னிறைவு பெற்றனர்.

2010 -2011 ம் ஆண்டு காலத்தில் ஒரே ஆண்டில் 77,158 இலவச வேளாண் மின் இணைப்புகளைக் கொடுத்துச் சாதனை படைத்தார் கலைஞர்.

அந்தச் சாதனைகளின் அடிச்சுவட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திராவிட மாடல் அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் 1 லட்சத்து 69 ஆயிரத்து 564 புதிய வேளாண் மின் இணைப்புகளைக் கொடுத்துப் புதிய சரித்திரம் படைத்திருக்கிறது. அதற்காக மின் கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 2016- 2021 ஆண்டுகளில் அண்ணா தி.மு.க. ஆட்சியில் உழவர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த வேளாண் மின் இணைப்புகளின் எண்ணிக்கை 1 லட்சத்து 38 ஆயிரத்து 592மட்டுமே. ஆனால், திராவிட மாடல் ஆட்சியில் மூன்றே ஆண்டுகளில் அந்த எண்ணிக்கையைக் கடந்து 1 லட்சத்து 69 ஆயிரத்து 564 புதிய மின் இணைப்புகளை வழங்கி சாதனை புரிந்துள்ளது.

வேளாண் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக திட்டங்களைத் தீட்டி அக்கறையோடு செயலாற்றிவரும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் ஆலோசனைகளால் வேளாண் மின் இணைப்புகளின் எண்ணிக்கை இந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது. இதனால், 3,38,380 ஏக்கர் வேளாண் நிலங்கள் பாசன வசதியைப் பெற்றிருக்கின்றன.

உழவர்களின் உண்மைத் தோழனாக முதலமைச்சர் ஸ்டாலின் சாதித்துக் காட்டியிருக்கிறார்; உழவர்களின் உள்ளத்தை வென்றிருக்கிறார். இவ்வாறு அமைச்சர் வி.செந்தில் பாலாஜி கூறியுள்ளார்.

# ரூ.40,000 கோடி சொத்தை உதறிவிட்டு துறவியான மலேசிய கோடீஸ்வரர்



சென்னை, 28 நவம்பர் 2024: மலேசிய கோடீஸ்வரர் ஆனந்த கிருஷ்ணனின் மகன் வென் அஜான் சிரிபான்யோ, 5 பில்லியன் டாலர் சொத்துக்களை உதறிவிட்டு துறவற வாழ்க்கையைத் தழுவியுள்ளார்.


அதிக பணம் சேர்த்து பணக்காரராக வேண்டும் என்பதே அனைவரின் விருப்பமாக உள்ளது. அதிலும் ஏற்கனவே பணக்காரர்களாக இருப்பவர்கள் மேலும் மேலும் தங்கள் சொத்துக்களை சேர்க்கவே விரும்புவார்கள். இப்படி அதிகமாக சொத்து சேர்த்து ஆடம்பர சொகுசு வாழ்க்கை வாழ வேண்டும் என்று நினைக்கும் கோடீஸ்வரர்களுக்கு மத்தியில் ஒரு கோடீஸ்வரர் தனது கோடிக்கணக்கான சொத்துக்களை உதறி தள்ளிவிட்டு, காட்டில் துறவு வாழ்க்கையை வாழ்ந்து வருகிறார்..

ஆம். மலேசிய கோடீஸ்வரரான ஆனந்த கிருஷ்ணனின் ஒரே மகனான வென் அஜான் சிரிபான்யோ, துறவற வாழ்க்கையை தழுவுவதற்காக 5 பில்லியன் டாலர் (இந்திய மதிப்பில் ரூ.40,000 கோடி) மதிப்பிலான சொத்துக்களை உதறிதள்ளி உள்ளார். மலேசியாவின் பணக்காரர்களில் ஒருவரான ஆனந்த கிருஷ்ணன், தொலைத்தொடர்பு, செயற்கைக்கோள்கள், எண்ணெய், ரியல் எஸ்டேட் மற்றும் ஊடகங்கள் என பரந்துபட்ட வணிக சாம்ராஜ்யத்தை வைத்திருக்கிறார்.

பிறக்கும் போதே கோடீஸ்வராக பிறந்த அஜான் சிரிபான்யோ தனது 18வது வயதில் புத்த துறவியாக மாறுவதற்கான வாழ்க்கையை மாற்றும் முடிவை எடுத்தார். இந்த முடிவு, வழக்கத்திற்கு மாறானதாக இருந்தாலும், அவரின் தந்தையும் புத்த மதத்தில் நம்பிக்கை வைத்திருந்த நிலையில், இவருக்கு சிறு வயதில் இருந்தே புத்த மதத்தின் மீது ஈர்ப்பு கொண்டுள்ளார். எனினும் புத்த மதத்தின் துறவியாக வேண்டும் என்பது அஜான் சிரிபான்யோவின் தனிப்பட்ட முடிவு என்று அவரின் குடும்பத்தினர் மதித்து ஏற்றுக்கொண்டுள்ளதாக கூறப்படுகிறது.

லண்டனில் தனது இரண்டு சகோதரிகளுடன் சேர்ந்து வளர்ந்த சிரிபான்யோ இங்கிலாந்தில் தனது கல்வியை முடித்தார். இவர் சுமார் 8 மொழிகளில் சரளமாக பேசக்கூடியவர். மேலும் புத்த மத போதனைகள் பற்றிய அவரின் புரிதலையும் ஆழமாக்கியது. அஜான் சிரிபான்யோவின் பயணம், பொருள் செல்வத்தை விட ஆன்மீக பயணத்தை தேர்ந்தெடுப்பதற்கான அரிய நிஜ வாழ்க்கைக்கு சான்றாக உள்ளது.

# ஐகானிக் ஸ்டார் அல்லு அர்ஜுனை சந்திக்கும் ரசிகரின் கற்பனையை நிறைவேற்றுகிறது




சென்னை, 28 நவம்பர் 2024: சன்ஃபீஸ்ட் டார்க் ஃபேண்டஸி, இந்தியாவின் மிகவும் பிரியமான குக்கீ பிராண்டுகளில் ஒன்றான அன்றாடத் தருணங்களை அசாதாரண அனுபவங்களாக மாற்றுவதில் பெயர் பெற்றுள்ளது, மிகவும் எதிர்பார்க்கப்பட்ட புஷ்பா 2: தி ரூல் திரைப்படத்துடன் கூட்டு சேர்ந்துள்ளது . இந்த சிறப்பு ஒத்துழைப்பின் ஒரு பகுதியாக, சன்ஃபீஸ்ட் டார்க் ஃபேண்டஸி, திரைப்பட வெளியீட்டிற்கு முன்னதாக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட லிமிடெட் எடிஷன் புஷ்பா 2 பேக்குகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த பேக்குகளில் அல்லு அர்ஜுனின் ஐகானிக் புஷ்பா அவதாரத்தின் பிரத்யேக படம் உள்ளது, இது ரசிகர்களுக்கும் நுகர்வோருக்கும் அவசியம் வைத்திக்க வேண்டிய ஒன்றாக ஆக்கிறது.

மேலும், சூப்பர் ஸ்டார் அல்லு அர்ஜுனை சந்திக்க ஐந்து அதிர்ஷ்டசாலி ரசிகர்களுக்கு வாழ்நாளில் ஒருமுறை கிடைக்கும் வாய்ப்பை பிராண்ட் வழங்கும். 'பிக்கஸ்ட் ஃபேன் பிக்கஸ்ட் ஃபான்டஸி' போட்டியுடன், புஷ்பாவின் ரசிகர்களுக்கு கனவு நனவாகும் தருணத்தை உருவாக்குகிறது.

பங்கேற்பாளர்கள் பிரத்யேக பிரச்சார மைக்ரோசைட்டில் சிறப்பு ஆகுமென்டட் ரியாலிட்டி ஃபில்டரைப் பயன்படுத்தி ஒரு செல்ஃபி எடுக்க வேண்டும், மேலும் உற்சாகமான பரிசுகளை வெல்வதற்கும் புஷ்பா நட்சத்திரத்தை சந்திப்பதற்குமான வாய்ப்புக்காக பிராண்டை டேகிங் செய்து அதைத் தங்கள் சமூக தளங்களில் பகிர வேண்டும்..

அது மட்டுமில்லை! புஷ்பாவின் உணர்வைக் கொண்டாடும் வகையில், ஹைதராபாத்தில் உள்ள உயர்கல்விக்கான இக்பாய் அறக்கட்டளை பல்கலைக்கழகத்தில் டார்க் ஃபேண்டஸி ஒரு மாபெரும் 'ரசிகர் பேரணியை' ஏற்பாடு செய்தது. இந்த தனித்துவமான கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக டெல்லி மற்றும் உத்தரபிரதேசம் போன்ற பல பகுதிகளிலிருந்தும் பயணித்த பக்தியுள்ள ரசிகர்கள் உட்பட 1000 க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களின் உற்சாகமான வருகையை இந்நிகழ்ச்சி கண்டது. ரசிகர் பேரணியானது திரைப்பட உரிமையின் அபரிமிதமான பிரபலத்தை வெளிப்படுத்தியது மட்டுமல்லாமல், டார்க் ஃபேண்டஸியின் பார்வையாளர்களுடனான ஆழமான தொடர்பை எடுத்துக்காட்டியது.

பிரச்சாரம் குறித்து கருத்து தெரிவித்த ஐடிசி லிமிடெட் பிஸ்கட் மற்றும் கேக்ஸ் கிளஸ்டரின் சீஃப் ஆபரேஷன் ஆஃபிஸர் திரு. அலி ஹாரிஸ் ஷேர், "புஷ்பா 2 உடனான எங்களது ஒத்துழைப்பு, புஷ்பா ரசிகர்கள் மற்றும் டார்க் ஃபேன்டஸி ஆர்வலர்கள் ஆகிய இருவருக்குமான தீவிர ஆர்வத்தையும் ஆழமான தொடர்பையும் அவர்களின் பொதுவான பிடித்தவற்றையும் கொண்டாடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.. ஐகானிக் ஸ்டார் அல்லு அர்ஜுனுடன் தொடர்பு கொள்ளவும், புஷ்பா பிரபஞ்சத்தின் ஒரு பகுதியாக உணரவும் இந்த தனித்துவமான வாய்ப்பை எங்கள் நுகர்வோருக்கு வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்."

மைத்ரி மூவி மேக்கர்ஸின் தலைமை நிர்வாக அதிகாரி திரு செர்ரி மேலும் கூறுகையில், "டார்க் ஃபேண்டஸி என்பது அனைவருக்கும் ஒத்த ஒரு பிராண்ட் மற்றும் பிராண்டுடன் ஒத்துழைப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். ஒன்றாக, புஷ்பா ரசிகர்களுக்காக உண்மையிலேயே சிறப்பான ஒன்றை உருவாக்கியுள்ளோம், அவர்கள் அதை அனுபவிப்பதற்காக நாங்கள் காத்திருக்க முடியாது. இந்த கூட்டாண்மை படைப்பாற்றல் மற்றும் அர்த்தமுள்ள வழிகளில் பார்வையாளர்களுடன் இணைவதற்கான எங்கள் பகிரப்பட்ட உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது."

பலருக்கு புஷ்பா வெறும் படம் மட்டுமல்ல; இது மில்லியன் கணக்கான எல்லைகளைத் தாண்டி எதிரொலிக்கும் ஒரு நிகழ்வு. சன்ஃபீஸ்ட் டார்க் ஃபேண்டஸி மற்றும் புஷ்பா 2 ஆகியவற்றுக்கு இடையேயான இந்த கூட்டணி, மக்கள் அவர்கள் போற்றும் கதாபாத்திரங்கள் மற்றும் அனுபவங்களுக்கு நெருக்கமாக கொண்டு வருவதன் மூலம் நட்சத்திர சக்தியை, ரசிகர்களை கொண்டாடுவதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. லிமிடெட் எடிஷன் புஷ்பா 2 பேக்குகள் தென்னிந்தியா முழுவதும் உள்ள பொது வர்த்தக கடைகள், நவீன வர்த்தக கடைகள் மற்றும் ஈகாமர்ஸ் தளங்களில் கிடைக்கும்.

# தமிழறிஞர் மறைமலை அடிகளாரின் மகன்வழி பேத்தி லலிதாவுக்கு வீடு: அமைச்சர் கோவி.செழியன் வழங்கினார்



சென்னை, 28 நவம்பர் 2024: தமிழறிஞர் மறைமலை அடிகளாரின் மகன் வழி பேத்தி லலிதாவுக்கு தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் அய்யனார் கோயிலில் புதிய வீட்டினை உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் வழங்கினார்.

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் முதலமைச்சரின் ஆணையின்படி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் வல்லம் அய்யனார் கோயில் பேஸ்- 1 திட்டத்தின்படி ரூ.8 லட்சத்து 23 ஆயிரம்-மதிப்பிலான கே-5 எண்ணுள்ள வீட்டை கட்டணம் ஏதுமின்றி தமிழறிஞர் மறைமலை அடிகளாரின் மகன்வழி பேத்தி லலிதாவுக்கு அமைச்சர் கோவி.செழியன், மாவட்ட கண்காணிப்பு அலுவலர் எம்.அரவிந்த், மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் ஆகியோர் முன்னிலையில் வழங்கினார்.

இது குறித்து அமைச்சர், நேற்றைய தினம் மாவட்ட கலெக்டரிடம் வீடு வழங்கக் கோரி கொடுத்த மனுவின் பேரில் மணிக்கணக்கில் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு முதலமைச்சர் வீடு வழங்க உத்தரவிட்டதின்பேரில், தமிழுக்காக தொண்டாற்றிய மறைமலை அடிகளாரின் மகன்வழி பேத்தி லலிதாவுக்கு இன்று வீடு வழங்கப்பட்டுள்ளது.

வீடு வழங்கப்பெற்ற லலிதா தெரிவித்தபோது, மறைமலை அடிகளாரின் பேத்தியாகிய எனக்கு எனது குடும்ப நிலை அறிந்து உடனடியாக வீடு வழங்கிய முதலமைச்சருக்கும், அமைச்சருக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் மற்றும் அனைத்து அலுவலர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மு.பாலகணேஷ், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர்.உஷா புண்ணியமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
வியாழன், நவம்பர் 28, 2024

## ஹிந்துஸ்தான் சர்வதேச பள்ளியில் உலகளாவிய கருத்தரங்கு 2024: நாளைய உலகத் தலைவர்களை உருவாக்குவது




சென்னை, 28 நவம்பர் 2024: ஹிந்துஸ்தான் சர்வதேச பள்ளி, காரப்பாக்கம் வளாகத்தில் நடைபெற்ற கௌரவம் மிக்க “எச் ஐ எஸ் குளோபல் கான்க்ளேவ் 2024” நிகழ்வானது, அரசியல் செயலாண்மைத் திறன் மற்றும் உலகளாவிய ஒருங்கிணைவு செயல்பாட்டில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் நிகழ்வாக அமைந்தது. ஐக்கிய நாடுகள் சங்கத்தின் கூட்ட நிகழ்வை முன்மாதிரியாக கொண்டு வடிவமைக்கப்பட்ட இந்நிகழ்வு, ஐக்கிய நாடுகள் சங்கத்தின் நிலையான வளர்ச்சி இலக்குகள் (எஸ் டி ஜிஸ்) என்பதனோடு தொடர்புடைய மிக முக்கியமான உலகளாவிய சவால்களை எதிர்கொள்வதற்காக துடிப்பும், ஆர்வமும் மிக்க இளம் தூதர்கள், கல்வியாளர்கள் மற்றும் உலகளாவிய தலைவர்களை ஓரிடத்தில் ஒன்றாக கூட்டிச் சேர்ந்திருந்தது. ஹிந்துஸ்தான் குழும நிறுவனங்களின் தலைவர் டாக்டர். ஆனந்த் ஜேக்கப், இளம் தலைவர்களுக்கான ஆற்றல் மிக்க தொலைநோக்கு செயல்திட்டத்துடன் இக்கருத்தரங்கை தொடங்கி வைத்தார். “ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த இன்றைய உலகில், நமது மாணவர்கள் வெறுமனே பார்வையாளர்களாக இருக்கக்கூடாது. மாறாக, உலகளாவிய தீர்வுகளை உருவாக்கும் பணியில் ஆர்வம்மிக்க தீவிர பங்கேற்பாளர்களாக அவர்கள் இருப்பது அவசியம். இப்போது நடைபெறுகின்ற இந்த எச் ஐ எஸ் குளோபல் கான்க்ளேவ், உலகளாவிய சிந்தனைகளை கொண்டு உள்நாட்டளவில் செயல்படுகின்ற திறம் மிக்க தலைவர்களை வளர்த்து உருவாக்குவதில் எமது அர்ப்பணிப்பையும், பொறுப்புறுதியையும் பிரதிபலிக்கிறது,” என்று தனது தொடக்க உரையில் குறிப்பிட்டார். காரப்பாக்கம் கல்வி வளாகத்தின் முதல்வர் வழங்கிய உத்வேகமளிக்கும் உரையுடன் இந்நிகழ்வு சிறப்பாக தொடங்கியது, இந்தியாவிற்கான மலேஷியாவின் மாண்புமிகு துணைத்தூதர் திரு. கே. சரவண குமார் இந்நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராக கலந்துகொண்டு சிறப்பித்தார். காலநிலை மாற்றம், மனித உரிமைகள் மற்றும் கல்வித்தளத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஆகியவை உட்பட, உடனடியாக கவனம் செலுத்த வேண்டிய உலகளாவிய பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பதற்காக இந்நிகழ்வின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கமிட்டி அமர்வுகள் இந்த கருத்தரங்கு நிகழ்வில் முக்கியமாக இடம்பெற்றன. தலைமை விருந்தினர் ஆற்றிய உரையில், முழுமையான கல்வி மீது இப்பள்ளி காட்டுகின்ற அர்ப்பணிப்பையும், பொறுப்புறுதியையும் மனமார பாராட்டினார். “உலக விவகாரங்களைப் புரிந்துகொள்வது என்பது, வெறுமனே ஒரு கல்வி சார்ந்த செயல்பாடு மட்டுமல்ல; இதுவொரு மிக முக்கியமான வாழ்க்கைத் திறனாகவும் இருக்கிறது. இது போன்ற செயல்தளங்கள், நிகழ்வுகள் வழியாக, சிக்கலான, அதிக நுட்பமான உலகளாவிய பிரச்சனைகளை பகுப்பாய்வு செய்யவும், இராஜதந்திர அறிவுத்திறனை வளர்த்துக்கொள்ளவும் நிலைப்புத்தன்மையுள்ள எதிர்காலத்திற்கு புதுமையான தீர்வுகளை முன்மொழியவும் மாணவர்கள் கற்றுக்கொள்வார்கள்,” என்று தனது உரையில் அவர் குறிப்பிட்டார். இந்நிகழ்வின் ஒரு தனித்துவமான சிறப்பம்சமாக மலேஷியாவில் நடைபெறுகின்ற குளோபல் இமெர்ஸன் புரோகிராம் இருக்கிறது. வெவ்வேறு கலாச்சாரங்களுக்கிடையே பரிச்சயத்தையும், சிறப்பான புரிந்துணர்வையும் மாணவர்களுக்கு இச்செயல்திட்டம் வழங்குகிறது. இத்தகைய சர்வதேச அனுபவங்கள், மாறுபட்ட பல்வேறு கண்ணோட்டங்களையும், கருத்துகளையும் புரிந்துகொள்கின்ற மற்றும் மதிக்கின்ற உண்மையான உலகளாவிய குடிமக்களாக உருவாவதற்கு மாணவர்களை தயார் செய்கின்றன. இந்த கருத்தரங்கு நிகழ்வு முழுவதிலும், உலகளாவிய பிரச்சனைகளுக்கு சிறப்பான மற்றும் விரிவான தீர்வுகளை உருவாக்கும் செயல்பாட்டுடன் தனிச்சிறப்பான தலைமைத்துவ பண்பு, பொது மேடைகளில் உரையாற்றுவது மற்றும் பேர பேச்சுவார்த்தைகளை நடத்தும் திறன் ஆகிய பண்புகளையும் இதில் பங்கேற்ற பிரதிநிதிகள் வெளிப்படுத்தினர். சர்வதேச ஒத்துழைப்பு மற்றும் அரசுகளின் ராஜதந்திர செயல்நேர்த்தியின் உணர்வை தெளிவாக வெளிப்படுத்தி நல்ல பங்களிப்பை வழங்கிய திறன்மிக்க பிரதிநிதிகளை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் இறுதியாக நடைபெற்றது. இந்த உலகளாவிய கருத்தரங்கின் வெற்றியானது, சரியான செயல்தளம் கிடைக்கப்பெறுகின்ற போது நமது இளம் தலைமுறையினர் எந்த சவாலையும் மன உறுதியுடன் எதிர்கொண்டு சமாளிப்பார்கள் மற்றும் உலகளாவிய பிரச்சனைகளுக்கு பயனளிக்கும் தீர்வுகளையும், யோசனைகளையும் முன்வைக்கும் திறன்களையும் கொண்டவர்கள் என்ற ஹிந்துஸ்தான் கல்வி குழுமத்தின் நம்பிக்கையை இந்த கருத்தரங்கு நிகழ்வின் வெற்றி வலுவாக கோடிட்டுக் காட்டியது.

## அகர்வால் டஃபண்டு கிளாஸ் இந்தியா லிமிடெட் - ன் முதல் பொது பங்கு வெளியீடு (ஐபிஓ )ஆரம்பம்

சென்னை: 28 நவம்பர், 2024: நாட்டில் வலுவேற்றப்பட்ட கிளாஸ் / கண்ணாடி உற்பத்தி துறையில் பெரிதும் மதிக்கப்படும் தயாரிப்பாளராக உருவெடுப்பது என்ற முதன்மை நோக்கத்துடன் நிறுவப்பட்ட அகர்வால் டஃபண்டு கிளாஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் (ஏ டி ஜி ஐ எல்), 2009 - ம் ஆண்டில் அதன் உற்பத்தி செயல்பாடுகளை தொடங்கியது. இந்திய தரநிலை நிறுவனம் (பி ஐ எஸ்), நிறுவியிருக்கும் தர அளவுகோல்களை பூர்த்தி செய்கின்ற, வலுவேற்றப்பட்ட கண்ணாடிகளின் தொகுப்பை தயாரிக்கும் இந்நிறுவனம் அவற்றை ஐஎஸ்ஐ லேபிளுடன் சந்தையில் வினியோகித்து வருகிறது. இந்திய சந்தையில் வலுவான பிராண்டு இருப்பினை ஏ டி ஜி ஐ எல் கொண்டிருக்கிறது. கடினமாக்கப்பட்ட, வலுவூட்டப்பட்ட, மதிப்பு சேர்க்கப்பட்ட கண்ணாடிகளுக்கு அடர்த்தி மற்றும் அளவில் பல்வேறு விருப்பத்தேர்வுகளை இந்நிறுவனம் வழங்கி வருகிறது. 2024 நவம்பர் 28 முதல், 2024 டிசம்பர் 2-ம் தேதி வரை முதல் பொது பங்கு வெளியீடு (ஐபிஓ) உடன் ஒரு பொது நிறுவனமாக மாறும் தனது திட்டத்தை அகர்வால் டஃபண்டு கிளாஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் அறிவித்திருக்கிறது. என்எஸ்இ எமெர்ஜ் தளத்தில் பங்குகளை பட்டியலிடுவதன் மூலம் ரூ.62.64 கோடி மூலதன நிதியை திரட்டுவது இதன் நோக்கமாகும். ஒவ்வொன்றும் ரூ. 10/- என்ற முகமதிப்பில், 57,99,600 ஈக்விட்டி பங்குகள் வெளியிடப்படுகின்றன. 2024 நவம்பர் 28 அன்று ஆரம்பமாகும் இப்பங்கு வெளியீடு, 2024 டிசம்பர் 2-ம் தேதியன்று நிறைவடையும். நிறுவனத்தின் தற்போதைய உற்பத்தி தொழிலகத்தில் புதிய இயந்திரங்களை வாங்குவதற்கும், சில கடன்களை திரும்பத் தருவதற்கும் மற்றும் நடப்பு மூலதன தேவைப்பாடுகளை எதிர்கொள்ளவும் மற்றும் நிறுவனத்தின் பொது நிர்வாக நோக்கங்களுக்காகவும் இந்த பங்கு வெளியீட்டின் மூலம் திரட்டப்படும் நிதியைப் பயன்படுத்த இந்நிறுவனம் திட்டமிட்டிருக்கிறது. அகர்வால் டஃபண்டு கிளாஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் சி எம் டி திருமதி. அனிதா அகர்வால் பேசுகையில், “என்எஸ்இ எமெர்ஜ் தளத்தில் எமது முதல் பொது பங்கு வெளியீட்டை (ஐபிஓ) - ஐ கொண்டிருப்பது எங்களுக்கு பெரும் மகிழ்ச்சியளிக்கிறது. தரத்தின் மீது வலுவான கூர்நோக்கத்துடன் செயல்படும் நாங்கள், எமது வாடிக்கையாளர்களோடும், சப்ளையர்களோடும் நீண்டகாலம் நீடிக்கும் நல்லுறவை கொண்டிருக்கிறோம். நாடு முழுவதிலும் விரிவான வினியோக வலையமைப்பும் எங்களிடம் இருக்கிறது. இன்னும் சிறப்பான செயல்பாட்டின் காரணமாக எமது முதலீட்டாளர்களுக்கு ஆதாயத்தை வழங்க இயலும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.” என்று கூறினார்.

## சி எஸ் ஆர் இன் ஒரு பகுதியாக கடந்த நிதியாண்டில் சுகாதாரம், கல்வி மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றில் முதலீடு செய்வதன் மூலம் முத்தூட் ஃபைனான்ஸ் நிறுவனம், 0.6 மில்லியன் வாழ்க்கைகளில் மாற்றத்தை ஏற்படுத்தியது

சென்னை, 28 நவம்பர் 2024: இந்தியாவின் மிகப்பெரிய தங்கக் கடன் என் பி எஃப் சி ஆன முத்தூட் ஃபைனான்ஸ் நிருவனம் 2023-24 நிதியாண்டில் முத்தூட் சோசியல் ரெஸ்பான்சிபிலிட்டி (விஷிஸி) முயற்சிகள் மூலம் சமூக - பொருளாதார மேம்பாட்டிற்கான தனது உறுதிப்பாட்டை தொடர்ந்து வலுப்படுத்தியது. நிதியாண்டு 24 இன் போது, இந்த நிறுவனம் பல்வேறு சமூகத்தை மையமாகக் கொண்ட திட்டங்களில் ரூ. 1000 மில்லியனுக்கு மேல் செலவுசெய்து, ஒரு முழுமையான மற்றும் பன்முக அணுகுமுறை மூலம் 0.6 மில்லியனுக்கும் அதிகமான மக்களின் வாழ்க்கைகளில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது.

1887 இல் முத்தூட் குழுமம் தொடங்கப்பட்டதில் இருந்து பாரம்பரியத்தைத் தொடர்வது, சமூகத்தை மேம்படுத்துவது மற்றும் நிலைத்தன்மையை வளர்ப்பது ஆகியவை முத்தூட் ஃபைனான்ஸ் நிறுவன மரபில் ஆழமாக வேரூன்றியுள்ளது. இந்த சி எஸ் ஆர் முன்முயற்சிகள் உடல்நலம், கல்வி, வாழ்வாதார ஆதரவு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், விளையாட்டு திறமைகளை ஊக்குவிப்பது, இந்தியாவின் கலைஞர்களை ஆதரிப்பது, வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் பிற உள்கட்டமைப்பு மேம்பாடு போன்ற முக்கிய துறைகளில் கவனம் செலுத்துவதன் மூலம் முழுமையான வளர்ச்சியை வழங்குவதில் கவனம் செலுத்தபட்டது. இந்த முயற்சிகள் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் செயல்படுத்தப்பட்டன.

முத்தூட் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் சி எஸ் ஆர் செயல்பாடுகள், மற்ற பலவைகளின் மத்தியில் யூ என் எஸ் டி ஜி 1 (வறுமை இல்லை), யூ என் எஸ் டி ஜி 2 (பூஜ்ஜிய பசி), யூ என் எஸ் டி ஜி 3 (நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு), யூ என் எஸ் டி ஜி 4 (தரமான கல்வி) ஆகியவை உட்பட ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சி இலக்குகளில் (யூ என் எஸ் டி ஜிஸ்) கிட்டத்தட்ட 12 வகைகளுடன் உடன் ஒத்துப்போகின்றன. கல்வியை முதன்மையான கவனம் செலுத்தும் பகுதியாகக் கொண்டு, இந்த நிறுவனம் தனது சி எஸ் ஆர் செலவினங்களில் சுமார் 75% நாட்டின் திறமையான மற்றும் பின்தங்கிய குழந்தைகளுக்கான கல்வி இடைவெளியைக் குறைக்க செலவிடப்பட்டது என்று அறிவிப்பதில் பெருமை அடைகிறது. இந்த முயற்சிகளில் மற்றவைகளுடன் புதிய கல்வி நிறுவன உள்கட்டமைப்புகளின் கட்டுமானம், பள்ளி எழுதுபொருட்களை நன்கொடையாக வழங்குதல், ஸ்மார்ட் அங்கன்வாடிகள் கட்டுமானம் மற்றும் புதுப்பித்தல், உயர்கல்வி உதவித்தொகை உள்ளிட்டவை அடங்கும். உலக நிகழ்வுகளில் இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக விளையாட்டு நடவடிக்கைகள் மற்றும் விளையாட்டு வீரர்களை ஆதரிப்பதற்காக கிட்டத்தட்ட ரூ. 10 கோடி செலவிடப்பட்டது. முத்தூட் ஃபைனான்ஸ் திபேஷ்வர் வனவிலங்கு சரணாலயம் மற்றும் மெல்காட் புலிகள் சரணாலயத்தில் சோலார் பம்புகளை நிறுவுவதன் மூலம் ஏராளமான தாவர இனங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு தனது ஆதரவை மேலும் விரிவுபடுத்தியது. பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் சவால்களை எதிர்த்துப் போராடவும், ஆண்டு முழுவதும் தொடர்ச்சியான நீர் விநியோகத்தை வழங்கவும் இது உதவுகிறது.

முத்தூட் ஃபைனான்ஸ் நிறுவனத்தின் துணை நிர்வாக இயக்குநர் திரு. ஜார்ஜ் முத்தூட் ஜார்ஜ் கூறுகையில், "சமூகத்திற்குத் திரும்பக் கொடுக்கும் முத்தூட் குழுமத்தின் விழுமியங்கள் மற்றும் நெறிமுறைகளில் ஒரு வலுவான நம்பிக்கை கொண்டவராக நாங்கள் நிதியாண்டு 24 இல் எங்கள் பகுதியில் மாற்றத்தை ஏற்படுத்த முடிந்ததில் மகிழ்ச்சியடைகிறோம். கல்வி, சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் ஆகிய எங்களின் மூன்று முக்கிய கவனம் செலுத்தும் பகுதிகளுடன் இணைந்து, ஒரு எண்ணற்ற பல்வேறு சிக்கல்களைத் தீர்ப்பதற்கான அடித்தளத்தை அமைப்பதற்கான பன்முக முயற்சிகளை நாங்கள் வலியுறுத்துகிறோம். எங்களின் சி எஸ் ஆர் முன்முயற்சிகளுக்குப் பின்னால் உள்ள இந்த முக்கிய நோக்கம், சமூக வளர்ச்சிக்கான ஒரு ஊக்கியாக இருப்பது, இந்தியாவின் நிலையான பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பது மற்றும் மேலும் ஒரு ஆத்மநிர்பர் பாரதத்தை உருவாக்குவது ஆகியவை ஆகும். ஒரு நம்பகமான என் பி எஃப் சி என்ற முறையில், பொருளாதார மற்றும் சமூக நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் மற்றும் முன்முயற்சிகளுக்கு நாங்கள் தொடர்ந்து முன்னுரிமை அளிப்போம், பெருநிறுவன நடைமுறைகள் மற்றும் சமூக நலன் ஆகியவற்றுக்கு இடையே இணக்கமான சமநிலைக்கு நாங்கள் பாடுபடுவோம்."என்று கூறினார்.

## “திரையுலகில் ரஜினி சூப்பர் ஸ்டார்; அரசியலில் நாம தான் சூப்பர் ஸ்டார்” - சீமான்

சென்னை, 28 நவம்பர் 2024: “திரையுலகில் ரஜினி சூப்பர் ஸ்டார். ஆனால் அரசியலில் நம்ம தான் சூப்பர் ஸ்டார் என்று சீமான் கூறினார்.

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் நேற்று மாவீரர் நினைவு தின நிகழ்ச்சி நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தப்பட்டது. அதன் பிறகு நாம் தமிழர் கட்சியின் கொடி ஏற்றப்பட்டு மெழுகுவர்த்தி ஏந்தி இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து, நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் மேடையில் பேசியதாவது:

நானும் ரஜினிகாந்தும் இரண்டே கால் மணி நேரம் சந்தித்து பேசியது எங்க இரண்டு பேருக்கு தான் தெரியும். இரண்டே கால் மணி நேரம் என்ன பேசினோம் என்பது எங்க இரண்டு பேருக்கு மட்டும் தான் தெரியும். ஆனால் நாங்கள் ஒரே ஒரு முறை தான் சந்தித்தோம். அதற்குள் அய்யோ... அய்யோ.. என கூச்சல். ஏன் தெரியுமா? திரையுலகின் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் என்றால் நம்மதான் அரசியலில் சூப்பர் ஸ்டார். இரண்டு ஸ்டாரும் சந்தித்ததில் பயம் வந்துடுச்சு.

நானும் என் படையும் இருக்கும் வரை பரந்தூரில் விமான நிலையமோ, தமிழ்நாட்டில் எட்டு வழி சாலையோ, காட்டுப் பள்ளியில் துறைமுகமோ ஒருபோதும் அமைக்க முடியாது. தமிழ்நாட்டில் தமிழ் படித்தால் மட்டுமே வேலை என்ற நிலையை கொண்டு வருவேன். ஏனென்றால் தமிழ் என்பது எங்கள் கொள்கை மொழி, ஆங்கிலம் என்பது பயிற்சி மொழி. ஆகவே நாங்கள் தமிழை வளர்ப்போம்” இவ்வாறு அவர் பேசினார்.